## எத்தனை மோடிகள் – அமித்ஷாக்கள் வந்தாலும்

# பாசிச பா.ஜ.க.வினால் நம்மை அசைத்துக்கூடப் பார்க்க முடியாது!

## புதுக்கோட்டையில் ஜல்லிக்கட்டு அமைப்புகளின் சார்பில் நடைபெற்ற நன்றியறிவிப்புப் பொதுக்கூட்டத்தில் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆவேச உரை!

**புதுக்கோட்டை, ஜூன் 19–**

**“எத்தனை மோடிகள், அமித்ஷாக்கள் வந்தாலும் பாசிச பா.ஜ.க.வினால் நம்மை அசைத்துக்கூடப் பார்க்க முடியாது” என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் புதுக்கோட்டையில் ஜல்லிக்கட்டு அமைப்புகளின் சார்பில் நடைபெற்ற நன்றி யறிவிப்பு பொதுக்கூட்டத்தில் ஆவேசத்து டன் உரையாற்றினார்.**

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

ஜல்லிக்கட்டு நம் தமிழ்நாட்டு மக்களுடைய பாரம்பரிய விளையாட்டு. ஜல்லிக்கட்டுப் போட்டியை நடத்துவதற்கு எந்தத் தடையும் இல்லை என்கிற ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்ப்பை உச்சநீதிமன்றம் வழங்கியிருக்கிறது. இந்தத் தீர்ப்பை சாத்தியமாக்கிய கழக அரசுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக நீங்கள் ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். இது நன்றி தெரிவிப்பதற்கான கூட்டமா? அல்லது ஜல்லிக்கட்டுக்கு வெற்றி விழாக் கூட்டமா? என்று கேட்குமளவிற்கு மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்.

இந்த வெற்றிக்கு மிக முக்கியமான காரணம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நடத்திய சட்டப் போராட்டம்தான். அதை உணர்ந்துதான் நீங்கள் இவ்வளவு பெரிய பாராட்டு விழாவை, நன்றி அறிவிப்பு விழாவை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்.

இந்தப் பாராட்டு நன்றி விழா மதுரை அலங்காநல்லூரில் நடைபெற்று இருக்க வேண்டியது. ஆனால், நம்முடைய ரகுபதி அண்ணன் அவர்களும், மெய்யநாதன் அவர்களும் “புதுக்கோட்டை மாவட்டம் தான் அதிக வாடிவாசல்கள் கொண்ட மாவட்டமாகும்; ஆகவே, இந்த நன்றி அறிவிப்பு விழாவினை புதுக்கோட்டையில் நீங்கள் நடத்தவேண்டும்” என்று கேட்டுக் கொண்டு இங்கே நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நன்றி அறிவிப்புக் கூட்டத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்களே கலந்துகொள்வதாக இருந்தது. ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு பல அலுவல்கள் இருப்பதால், என்னை அழைத்து, “ நீ போய் அந்த விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்திடு !” என அன்புக் கட்டளையிட்டார்கள், முதலமைச்சரின் அன்புக்கட்டளையை ஏற்று நான் இங்கே வந்திருக்கின்றேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இங்கே வரவில்லை என்றாலும், அவருடைய நினைப்பு முழுவதும் ஜல்லிக்கட்டுக்கான இந்த நன்றி அறிவிப்பு விழாவில்தான் இருக்கும்.

இளைஞர் நலத் துறை அமைச்சர், விளையாட்டு நலத் துறை அமைச்சர் என்கிற காரணத்தினால், ஜல்லிக்கட்டு வீர விளையாட்டு என்பதால், இவ்விழாவில் கலந்துகொள்ள என்னை நீங்கள் அழைத்திருக்கிறீர்கள். நானும் அந்த உணர்வோடு, அன்போடு இவ்விழாவில் கலந்துகொண்டிருக்கின்றேன்.

### புதுக்கோட்டை ஜல்லிக்கட்டு போட்டியை பார்க்க வருவேன்!

2018 ஆம் ஆண்டிலிருந்து நானும் அலங்காநல்லூர் பகுதிக்குச் சென்று, ஒவ்வொரு ஜல்லிக்கட்டுப் போட்டியையும் தொடர்ந்து பார்த்து, ரசித்து வருகிறேன். கடந்த மாதம் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு அரசு நிகழ்ச்சிக்காக ஆய்வுக் கூட்ட நிகழ்விற்கு வந்திருந்தேன். இப்பொழுது அதே புதுக்கோட்டை மாவட்டத்திற்கு இந்த நன்றி அறிவிப்பு விழாவிற்கு வந்திருக்கின்றேன். அடுத்த முறை புதுக்கோட்டை ஜல்லிக்கட்டுப் போட்டியைப் பார்ப்பதற்காக கண்டிப்பாக நான் வருவேன் என்கிற வாக்குறுதியை உங்களிடம் கூறிக் கொள்கிறேன்.

ஜல்லிக்கட்டு நடக்கக் கூடாது என்று ஒரு கும்பல் பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தியது. தமிழர்களுக்கென்று எவ்வளவோ அடையாளங்கள் உள்ளன; ஆனால், இப்பொழுது ஜல்லிக்கட்டு தமிழர்களுடைய முக்கியமான ஒரு அடையாளமாக மாறியிருக்கிறது என்றால், அதற்கு நீங்கள் நடத்திய போராட்டம்தான் காரணமாகும்.

### பின் வாசல் வழியாக நுழையப் பார்க்கிறார்கள்!

தமிழ்நாட்டில் இப்பொழுது என்னென்ன நடக்கிறது என்று உங்களுக்கெல்லாம் தெரியும்.

தமிழ்நாட்டையே பிடிக்காத பாசிஸ்ட்டுகள் இப்பொழுது அரசியல் ஜல்லிக்கட்டை தொடங்கியிருக்கிறார்கள். இதில் என்ன கொடுமை என்றால், அந்த ஆட்டத்தில்கூட அவர்களால் நேர்மையாக ஆட முடியவில்லை. இப்பொழுதுகூட பின்வாசல் வழியாகத்தான் நுழைய முயற்சிக்கிறார்கள்.

ஜல்லிக்கட்டைப் பொறுத்தவரை வாடிவாசல் வழியாகத்தான் காளைகள் வரும். அதை நேரே எதிர்கொண்டு அடக்குவது தான் நம்முடைய பண்பாடாகும். ஆனால், பாசிஸ்ட்டுகள் அப்படியில்லை. எப்பொழுதுமே அவர்களுக்குப் புறவாசல்தான் தெரியும்; அதன் வழியாகத்தான் நுழைய முயற்சிப்பார்கள். ஆனால், அதை தமிழ்நாட்டு மக்கள் எப்பொழுதுமே அனுமதிக்கமாட்டார்கள்.

நீங்கள் அத்தனை பேரும் தமிழ்நாட்டு அரசுக்கு நன்றி சொல்ல வந்திருக்கிறீர்கள். ஆனால், நான் இங்கே வந்திருப்பது, உங்களுக்கு நன்றி சொல்ல, உங்களுக்கு வாழ்த்துச் சொல்ல வந்திருக்கின்றேன்.

ஏனென்றால், ஜல்லிக்கட்டுப் போராட்டத்தினுடைய வெற்றி என்பது உங்களுடைய வெற்றி மக்களுடைய வெற்றி. தமிழ்நாட்டு மக்கள் ஒற்றுமையோடு திரண்டு நடத்திய போராட்டத்திற்குக் கிடைத்த மகத்தான ஒரு வெற்றியாகும். அந்த ஒற்றுமை உணர்வுதான் ஒன்றிய அரசால் மூடப்பட்ட வாடிவாசலைத் திறக்க வைத்தது.

ஜல்லிக்கட்டு தடை நீங்கியதற்கு, அ.தி.மு.க.காரர்களும் சொந்தம் கொண்டாடுகிறார்கள். இதில் கொடுமை என்னவென்றால், ஜல்லிக்கட்டுக்கு தடை விதித்ததே 2016 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் தான். அதற்குப் பிறகு என்ன நடந்தது என்று உங்களுக்கெல்லாம் தெரியும்.

### ஜல்லிக்கட்டுக்கு தடை விதித்ததே அ.தி.மு.க. அரசு தான்!

எந்தவித அரசியல் பின்புலமும் இல்லாமல், மாணவர்கள் போராட்டக் களத்தில் இறங்கினர். டிசம்பர், 2016 ஆம் ஆண்டு வெறும் 5 பேர் தொடங்கிய போராட்டம், ஜனவரி முதல் வாரத்தில் உலகம் முழுக்க அந்தப் போராட்டம் பெரிதானது. மெரீனா கடற்கரையில் ஒட்டுமொத்த தமிழ்நாடுமே திரண்டு நின்று, ஜல்லிக்கட்டுக்கு ஆதரவான போராட்டத்தை நடத்தியது.

ஆனால், அன்றைக்கு ஆட்சியில் இருந்த அ.தி.மு.க.வினர் என்ன செய்தார்கள்? போராட்டக்காரர்களை அழைத்துப் பேசி, ஒரு தீர்வு காணுவதற்கான முயற்சிகளை எடுக்கவில்லை. மாறாக, போராடிய இளைஞர்கள் மீது கொலை வெறித் தாக்குதல் நடத்தியதுதான் அ.தி.மு.க. அரசு.

ஜல்லிக்கட்டுக்காகப் போராடிய இளைஞர்களுக்கு உதவி செய்த மீனவர்களின் வீடுகள் எல்லாம் கொளுத்தப்பட்டன; வாகனங்கள் கொளுத்தப்பட்டன. ஜல்லிக்கட்டுப் போராட்டத்தில் தேச விரோதிகள் நுழைந்துவிட்டார்கள் என்று போராட்டத்தினை கலைக்கப் பார்த்தார்கள். ஆனால், கொஞ்சம்கூட வெட்கமே இல்லாமல், இன்றைக்கு ஜல்லிக்கட்டு வெற்றிக்கு நாங்கள் தான் காரணம் என்று அ.தி.மு.க.காரர்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஜல்லிக்கட்டுப் போராட்டத்தை மட்டு மல்ல, எந்தப் போராட்டத்தையும் அ.தி.மு.க. அரசு முறையாகக் கையாண்டதில்லை.

உங்களுக்கெல்லாம் தெரியும், தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலையை எதிர்த்து நடைபெற்ற 100 நாள்கள் போராட்டத்தில், 13 பேரைச் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அதுமட்டுமல்ல, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஹைட்ரோ கார்பன் திட்டத்தை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தையும் எப்படிக் கலைத்தார்கள் என்று உங்களுக்கெல்லாம் தெரியும்.

பா.ஜ.க. ஒன்றிய அரசு ஏதாவது செய்து தமிழ்நாட்டில் நுழைந்துவிட வேண்டும் என்று 2016 ஆம் ஆண்டிலிருந்து, குறிப்பாக ஜெயலலிதா அம்மையார் மறைந்த பிறகு பெரிதும் முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அ.தி.மு.க.வையே பா.ஜ.க.வின் கிளைக் கழகம் போல் பாவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லோரும் அ.தி.மு.க.வினர் போன்று இருக்கமாட்டார்கள் என்பதற்கு உதாரணம் தான், இந்த ஜல்லிக்கட்டுப் போராட்டமாகும்.

அ.தி.மு.க. எந்தப் போராட்டத்தை ஒடுக்க நினைத்ததோ அப்பொழுது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நம்முடைய தலைவர் அவர்கள், அந்த ஜல்லிக்கட்டுப் போராட்டத்திற்கு முழு ஆதரவு அளித்தார்.

## மோடிக்கும் பயப்படமாட்டோம் இ.டி.க்கும் பயப்படமாட்டோம்!

### தமிழ்நாட்டை பினோக்கி இழுத்துக்கொண்டிருக்கிறார்!

தமிழ்நாட்டிற்கு இப்பொழுது புதிதாக ஒருவர் வந்திருக்கிறார். அவருடைய வேலையை விட்டுவிட்டு, வேறு வேலைகளைப் பார்ப்பதுதான்.

நான் யாரைச் சொல்லுகிறேன் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும்.

மனிதர்களில் ஒருவர் தாழ்ந்தவர்; இன்னொருவர் உயர்ந்தவர் என்று சொல்லுகின்ற சனாதனத்தைத் தூக்கிப் பிடிப்பது. மாநிலங்களுக்கெல்லாம் ஒரு கலாச்சாரமே கிடையாது என்று கதை விடுவது.

குழந்தைத் திருமணத்தை ஆதரிப்பது என்று தமிழ்நாட்டையே அவர் பின்னோக்கி இழுத்துக் கொண்டிருக்கிறார்.

ஒவ்வொரு மாநிலத்திற்கும் இருக்கின்ற கலாச்சாரங்களின் தொகுப்புதான் இந்தியக் கலாச்சாரம். பல மொழிகள், பல கலாச்சாரங்கள் கொண்டதுதான் இந்தியா. ஆனால், இந்தியாவில் ஒன்று, இந்தி மொழி இருக்க வேண்டும்; அப்படியில்லையானால், செத்துப் போன மொழியான சமஸ்கிருதம் இருக்கவேண்டும் என்பதுதான் அவர்களுடைய எண்ணம். எப்படியாவது நம்மை ஒழிக்க வேண்டும் என்று முயற்சி செய்கிறார்கள்.

### பா.ஜ.க.வின் கனவு பலிக்காது!

திராவிட முன்னேற்றக் கழகம் இல்லையென்றால், எளிதாகத் தமிழ்நாட்டை அபகரித்துக் கொள்ளலாம் என்று முயற்சி செய்கிறார்கள். ஆனால், அவர்களுடைய கனவு ஒருபோதும் பலிக்காது.

தி.மு.க. என்கின்ற இயக்கம் பல லட்சம் தொண்டர்களின் ரத்தத்தால், வியர்வையால் உருவான இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம்.

### மொரார்ஜியிடம் நிதி கேட்ட கலைஞர்!

நான் ஏற்கனவே பலமுறை சொல்லியிருக்கின்றேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைச் செயலாளரைக்கூட உங்களால் தொட்டுப் பார்க்க முடியாது.

திராவிட முன்னேற்றக் கழகம் இன்று மட்டுமல்ல, என்றைக்குமே ஒன்றிய அரசின் அடக்குமுறைகளைக் கண்டு பயந்த இயக்கம் கிடையாது. இதற்காக ஒரு சம்பவத்தை நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்து, அவர் மறைந்த பிறகு, 1969 ஆம் ஆண்டு, நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்கிறார்.

அப்பொழுது தமிழ்நாட்டிலே மிகப்பெரிய வறட்சி. முதலமைச்சராக இருக்கக்கூடிய கலைஞர் அவர்கள், அமைச்சர்களை அழைத்துக்கொண்டு டெல்லிக்குச் செல்கிறார்.

ஒன்றிய துணை பிரதமரைச் சந்தித்து வறட்சி நிதி கேட்கவேண்டும் என்பதற்காக. அப்பொழுது பிரதமராக இருந்தவர் இந்திராகாந்தி அவர்கள். ஒன்றிய துணை பிரதமரைச் சந்தித்து, முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஒரு வேண்டுகோளை வைக்கிறார்.

“ தமிழ்நாட்டில் மிகப்பெரிய வறட்சி; ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு 5 கோடி ரூபாய் நிதி கொடுக்கவேண்டும்” என்பது தான் அந்த வேண்டுகோள்.

ஒன்றிய துணைப் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள் கடுங்கோபத்துடன், “என்ன? வந்தவுடன் 5 கோடி ரூபாய் கேட்கிறீர்கள்; நாங்கள் என்ன வீட்டில் பணம் காய்க்கும் மரமா வைத்திருக்கிறோம்?” என்று கேட்கிறார்.

இதைக் கேட்டவுடன் முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்குக் கோபம் வந்து, “அப்படி ஒரு மரம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அப்படி ஒரு மரம் இருந்திருந்தால், நான் ஏன் உங்களிடம் வருகிறேன்?” என்று கலைஞர் அவர்கள் வீரமாகப் பேசிவிட்டு, வெளியில் வந்துவிட்டார். முதலமைச்சர் கலைஞரோடு சென்ற அமைச்சர்கள் எல்லாம், ஒன்றிய துணைப் பிரதமரைப் பார்த்து இப்படி தைரியமாகப் பேசுகிறாரே என்று வியந்து போனார்கள். இன்று அதே நிலைமைதான்.

நம்முடைய முதலமைச்சர் அவர்களும், கலைஞர் வழியில், ஒன்றிய பா.ஜ.க. அரசு சொல்லுகின்ற கட்டளைகளுக்கோ, சொல்லுகின்ற பணிகளுக்கோ, அவர்கள் நடத்துகின்ற நாடகங்களுக்கோ, மாநில அரசின் உரிமைகளைப் பறிக்கின்ற செயல்களுக்கோ என்றும் நம்முடைய தலைவர் ஒத்துக்கொள்ளமாட்டார்; அவற்றை எதிர்த்து குரல் கொடுத்துக் கொண்டுதான் இருப்பார்.

இப்படித்தான் கீழடி அகழாய்விற்கு ஒரு முட்டுக்கட்டை போட நினைத்தார்கள். ஆனால், இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள், கீழடியில் முறையான அகழ்வாராய்ச்சிக்கு ஏற்பாடு செய்து, அங்கே நிரந்தரமாக ஓர் அருங்காட்சியகத்தைத் திறந்து வைத்திருக்கிறார். இதுதான் தி.மு.க.விற்கும் அ.தி.மு.க.விற்கும் உள்ள வித்தியாசமாகும்.

### தி.மு.க.விற்கும் அ.தி.மு.க.விற்கும் உள்ள வித்தியாசம்!

அண்ணா நூற்றாண்டு வந்தபொழுது, நம்முடைய தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தைத் திறந்து வைத்தார்.

அதேபோல, நம்முடைய கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டுக்கு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், சென்னையில் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை, மதுரையில் கலைஞர் பெயரில் நூற்றாண்டு நினைவு நூலகத்தை அமைத்திருக்கின்றார். ஒரு தலைவருடைய நூற்றாண்டை, மக்களுக்குப் பயன்படுகின்ற வழியில் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார் நம்முடைய தலைவர் அவர்கள்.

### அலங்காநல்லூரில் மிகப் பெரிய ஜல்லிக்கட்டு ஸ்டேடியம்!

ஆனால், அ.தி.மு.க.காரர்களை நினைத்துப் பாருங்கள்; எம்.ஜி.ஆருக்கு நூற்றாண்டு விழா வந்த பொழுது, அப்போதைய அ.தி.மு.க. ஆட்சியில், கடற்கரை சாலையில் ஒரு ஆர்ச் வளைவு மட்டும் தான் வைத்தார்கள். இதுதான் அ.தி.மு.க.விற்கும் தி.மு.க.விற்கும் உள்ள வித்தியாசம்.



அதேபோல், நாம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததும், மதுரை அலங்காநல்லூரில் மிகப் பெரிய ஜல்லிக்கட்டு ஸ்டேடியத்தை உருவாக்குவோம் என்கிற வாக்குறுதியைக் கொடுத்தோம். இப்பொழுது அந்தப் பணிகள் மிக விரைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 25 சதவிகிதப் பணிகள் முடிந்துவிட்டன. அடுத்த ஜல்லிக்கட்டுப் போட்டிக்குள், அலங்காநல்லூரில் மிகப்பெரிய ஒரு ஜல்லிக்கட்டு ஸ்டேடியத்தைத் திறக்கவிருக்கின்றார் நம்முடைய தலைவர் அவர்கள்.

## ஜல்லிக்கட்டுப் போராட்டத்தின் வெற்றி! தமிழ்நாட்டு மக்களுக்கு கிடைத்த வெற்றி!

அதேபோல, தொகுதிக்கு ஒரு “மினி ஸ்டேடியம்” என்ற அறிவிப்பையும் செய்திருந்தோம். அப்படி செய்யும்பொழுது, புதுக்கோட்டை மாவட்டம் போன்று, அதிக அளவில் ஜல்லிக்கட்டுப் போட்டிகளை நடத்துகின்ற மாவட்டங்களில், மினி ஸ்டேடியத்தோடு வாடிவாசலையும் அமைக்கவேண்டும் என்கிற கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நிச்சயமாக உங்களுடைய கோரிக்கையினை முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, நிறைவேற்றுவோம்.

இதனால்தான், நம்முடைய எதிரிகள், நம்முடைய தலைவரைப் பார்த்து அடிக்கடி சொல்வது, “ Stalin is more dangerous than Kalaignar” என்று.

எத்தனை மோடிகள் வந்தாலும், எத்தனை அமித்ஷாக்கள் வந்தாலும், எத்தனை ஜிக்கள் வந்தாலும், உங்களால் தமிழ்நாட்டை ஒன்றும் செய்ய முடியாது.

நாம் அத்தனை பேரும் ஓரணியில் திரண்டு நின்றால், நம்மை பாசிச பா.ஜ.க.வால் அசைத்துக்கூட பார்க்க முடியாது. இதுதான் ஜல்லிக்கட்டுப் போராட்டம் சொல்கின்ற முக்கியமான செய்தியாகும்.

பொதுவாக எல்லா அரசியல் கட்சிகளுக்கும் ஒரு தொண்டர் படை இருக்கும். ஆனால், பா.ஜ.க.வினுடைய தொண்டர் படை எதுவென்று கேட்டீர்களேயானால், வருமான வரித்துறை, அமலாக்கத் துறை, சி.பி.ஐ. இவையெல்லாம்தான் பா.ஜ.க.வினுடைய தொண்டர் படை. அதிலும் தேர்தல் நேரத்தில்தான் அந்தத் தொண்டர் படையை இறக்கி விடுவார்கள், எதிர்க்கட்சிகளை பயமுறுத்துவதற்கு.

2014 ஆம் ஆண்டு மோடி அரசு ஒன்றியத்தில் அமைந்த பிறகு, 121 அரசியல் தலைவர்களை அமலாக்கத் துறை விசாரித்திருக்கிறது. அதில், 115 பேர் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள். இதிலேயே தெரியவில்லையா, அமலாக்கத் துறையின் லட்சணம்?

டில்லியில், ஆம் ஆத்மி அரசின் துணை முதலமைச்சர் மணீஷ் சிசோடியா,

மகாராஷ்டிராவில், எதிர்க்கட்சியைச் சார்ந்த சஞ்சய் ராவத்,

தேசியவாத காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த அனில் தேஷ்முக்,

மேற்குவங்கத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 19 தலைவர்கள், பீகாரில் ராஷ்ட்ரிய ஜனதா தளத்தைச் சேர்ந்த அருமைச் சகோதரர் தேஜஸ்வி யாதவ், தெலுங்கானாவில், திருமதி கவிதா ராவ், கருநாடகாவில் டி.கே.சிவக்குமார், இப்படி அத்தனை பேரும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள்தான்.

இங்கே தமிழ்நாட்டில்கூட நம்முடைய அமைச்சர் அண்ணன் செந்தில்பாலாஜி அவர்களுடைய வீட்டில், 18 மணி நேரம் உணவு கொடுக்காமல், தண்ணீர் கொடுக்காமல், கழிப்பறைக்குச் செல்லவிடாமல் சோதனை நடத்தினார்கள்.

எதிர்க்கட்சிகளை சல்லடை போடுகின்ற இந்த பா.ஜ.க.வினுடைய லட்சணம் என்ன?

அதானி என்கிற ஒருவரைப்பற்றி கேள்விப்பட்டு இருப்பீர்கள். ஒன்றிய பிரதமர் மோடி அவர்களுடைய மிகமிக நெருங்கிய நண்பர் அவர். மோடி எங்கேயாவது வெளிநாட்டிற்குச் சென்றால், அதானி இல்லாமல் செல்லமாட்டார். அதானியினுடைய விமானத்தில்தான் செல்வார். உலகத்தில் உள்ள எந்த நாட்டிற்குச் சென்றாலும், அதானியை அழைத்துக்கொண்டு போய், அங்கே முதலீடு செய்துவிட்டு வருவதுதான் மோடியினுடைய வேலையாகும். இந்த அதானி அவர்கள் சில மாதங்களுக்கு முன்பு, உலகப் பணக்காரர்களின் பட்டியலில் 2 ஆம் இடத்தில் இருந்தார். அதற்குக் காரணம் மோடி அவர்கள்தான்.

ஹிண்டன்பர்க் என்கிற அமெரிக்க நிறுவனம் தீர விசாரித்து ஓர் அறிக்கை வெளியிட்டது. அதானியினுடைய நிறுவனம் குறுகிய காலத்தில், எப்படி இவ்வளவு கோடி பணத்தை சம்பாதித்தார்கள்? என்று. ஆனால், இதற்கெல்லாம் மோடி அவர்கள் வாயைத் திறக்கவேயில்லை. அமலாக்கத் துறை அதானியின் பக்கம் எட்டிக்கூட பார்க்கவில்லை.

இதுகுறித்து நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்டார், நம்முடைய காங்கிரஸ் தலைவர். ராகுல்காந்தி அவர்கள். ஆனால் அவர் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல், அவர் கேள்வி கேட்டார் என்கிற ஒரே காரணத்திற்காக, அவருடைய பதவி பறிக்கப்பட்டது.

எனவே, இப்பொழுது செந்தில்பாலாஜி அவர்களைக் குறி வைத்திருக்கிறார்கள்.

நான் மீண்டும் சொல்கிறேன், தந்தை பெரியார், பேறறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரால் வளர்க்கப்பட்டவர் நம்முடைய தலைவர் அவர்கள்.

நாங்கள் மோடிக்கும் பயப்படமாட்டோம் இ.டி.,க்கும் பயப்படமாட்டோம்.

இந்த ரெய்டு எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் புதிதல்ல.

இன்னொரு சம்பவத்தைச் சொல்கிறேன்.

1975 ஆம் ஆண்டு நெருக்கடி காலகட்டத்தில், தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவருடைய ஆட்சியைக் கவிழ்த்து விட்டார்கள்.

கலைஞர் அவர்கள் வீட்டிலிருந்து புறப்படும்பொழுது, வருமான வரித் துறை, அமலாக்கத் துறை கோபாலபுரம் இல்லத்திற்கு ரெய்டு வருகிறார்கள்.

“நீங்கள் முதலமைச்சராக ஆன பிறகு தான் இந்த வீட்டை வாங்கி இருக்கிறீர்கள். ஆகவே, இந்த வீட்டை அளந்து சோதனை போட்டு மேலிடத்திற்கு அறிக்கை அனுப்பவேண்டும்” என்று சொல்லி ரெய்டு நடத்துகிறார்கள்.

அப்பொழுது கலைஞர் அவர்கள் கொஞ்சம்கூட பதற்றப்படாமல், “நான் இந்த வீட்டை வாங்கியது 1956 ஆம் ஆண்டு. புகார் கொடுத்த என்னுடைய நண்பர் எம்.ஜி.ஆருக்கு இதுகூடவா தெரியவில்லை” என்று கேட்கிறார்.

அதுமட்டுமல்ல, வீட்டிற்குள் இருப்பவர்களை அழைத்து, “வருமான வரித் துறையினர் வந்திருக்கிறார்கள்; வீட்டை அளந்து பார்க்கவேண்டுமாம்; அவர்கள் அந்தப் பணியை முடித்தவுடன், அவர்களுக்கு காபி, டீ கொடுத்து அனுப்புங்கள்” என்கிறார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

அதன் பிறகு, முரசொலி அலுவலகத்திற்குச் சென்று, உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறார். கோபாலபுரம் இல்லத்தில் சோதனையை முடித்துவிட்டு, வருமான வரித் துறையினர் முரசொலி அலுவலகத்திற்குச் செல்கிறார்கள்.

கலைஞருடைய அறைக்குச் சென்று, “இந்த அறையை நாங்கள் சோதனை செய்யவேண்டும்” என்று அத்துறை அதிகாரிகள் மிரட்டுகிறார்கள்.

கலைஞர் சொல்கிறார், “நான் உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருக்கின்றேன். உங்களுக்கு அதனால் தொந்தரவு இல்லை அல்லவா! நீங்கள் வேண்டுமானால் சோதனை செய்துகொள்ளுங்கள்” என்றார்.

கலைஞர் அறையில் இருந்த தொலைபேசி ஒயர்கள் எல்லாம் பிடுங்கி எறியப்பட்டன. ஆனால், கலைஞர் எதற்கும் அசையவில்லை; பயப்படவில்லை. அதுதான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அதைத்தான் நம்முடைய தலைவர் அவர்களுக்கும், முத்தமிழறிஞர் கலைஞரின் உடன்பிறப்புகளுக்கும் நம்முடைய கலைஞர் அவர்கள் சொல்லிக் கொடுத்திருக்கின்றார்.

### ஆளுநர் ஒன்றிய அரசின் ரப்பர் ஸ்டாம்ப்!

இன்றைக்கு ஒன்றிய அரசின் மூலமாக, ஆளுநரின் மூலமாக நம்மையெல்லாம் கட்டுப்படுத்தி விடலாம் என்று ஒன்றிய பா.ஜ.க. அரசு நினைக்கிறது.

வழக்கம்போல இந்த விஷயத்திலும் ஆளுநர், தமிழ்நாட்டினுடைய பெயரை மாற்றவேண்டும் என்று சொன்னார். அதே போன்று ஆன்லைன் ரம்மி சூதாட்டத்திற்குத் தடை விதிக்க முடியாது என்று சொன்னார். ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொடுத்த அழுத்தத்தினால், எல்லாவற்றிலும் பின்வாங்கினார் ஆளுநர்.

மொத்தத்தில் இங்கே இருக்கக்கூடிய ஆளுநர், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளுநர் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றார்; அவர் ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்கிற இடத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டுப் போவது தான் ஆளுநருடைய வேலையாகும்.

மொத்தத்தில் நம்முடைய ஆளுநர் அவர்கள், ஒன்றிய அரசினுடைய ஒரு ரப்பர் ஸ்டாம்ப். அவ்வளவுதான்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்வார், “ஆட்டுக்குத் தாடி எதற்கு? நாட்டிற்கு ஆளுநர் எதற்கு?” என்று.

அதுமட்டுமல்ல, நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபொழுது, கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் கோடிக்கணக்கில் ஊழல் செய்திருக்கிறார்கள். ஆளுநரிடம் கிட்டத்தட்ட 21 கோப்புகள் கிடப்பில் உள்ளது. அமைச்சரவையின் ஒப்புதல் பெற்று, சட்டப்பேரவையில் தீர்மானம் போட்டு ஆளுநரிடம் அனுப்பியவை அவை. அதில் ஆளுநர் கையெழுத்துப் போடாமல் இருக்கிறார். அதில் மிகமிக முக்கியமான கோப்புகள் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்களின்மீது நாம் ஊழல் வழக்குப் பதிவு செய்வதற்கான கோப்புகள். அந்த அளவிற்கு அ.தி.மு.க.வும், பா.ஜ.க.வும் பின்னிப் பிணைந்திருக்கிறார்கள். ஊழல் அமைச்சரவை நடத்திய எடப்பாடி பழனிசாமி இன்றைக்கு நம்மைப் பார்த்து கேள்வி கேட்கிறார்.

இந்த மாவட்டத்தினுடைய அ.தி.மு.க. அமைச்சராக இருந்த விஜயபாஸ்கர் வீட்டில், ஆர்.கே.நகர் தேர்தலின்போது ரெய்டு நடந்தது. பணப்பட்டுவாடா செய்வதற்காக வைத்திருந்த டைரி, அமலாக்கத் துறையிடம், வருமான வரித்துறையிடம் மாட்டிக் கொள்ளக்கூடாது என்பதற்காக சுவர் ஏறி குதித்து ஓடினார்கள்.

அமைச்சர் வேலுமணி வீட்டில் அய்.டி. ரெய்டு நடத்தப்பட்டதே, ஒருவரையாவது கைது செய்தார்களா?

அவர்களோடு கூட்டணி வைத்திருப்பதினால், எல்லாவற்றையும் மறந்துவிட்டது ஒன்றிய அரசு. அ.தி.மு.க. ஆட்சியில்தான் முதன்முதலில், தலைமைச் செயலகத்தில் ரெய்டு செய்தார்கள். அதற்குக் கண்டனம் தெரிவித்தது அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நம்முடைய தலைவர் தான். அ.தி.மு.க. முதலமைச்சரோ, அமைச்சர்களோ யாரும் வாய் திறக்கவில்லை.

இன்னும் கேட்டீர்களேயானால், முன்னாள் அமைச்சர் மெயின்ரோடு ஜெயக்குமார் எல்லாம், அன்றைக்கு சாதாரண சர்வீஸ் ரோடு போன்று ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். இன்றைக்கு அவர்கள், நம்மைப் பார்த்து கேலி பேசுகிறார்கள்.

இதையெல்லாவிட, ஒன்றிய பா.ஜ.க. ஒரு செங்கோல் நடுகிறேன் என்று கிளம்பிப் போயிருக்கிறார்கள்.

ஒரு மாநிலத்தில் வெற்றி பெறவேண்டுமானால், அந்த மாநில மக்களுடைய நம்பிக்கையை நீங்கள் பெற்றாகவேண்டும். தமிழ்நாட்டில் பா.ஜ.க.வை தமிழ்நாட்டு மக்கள் அனுமதிக்கமாட்டார்கள். நாடாளுமன்றத்தில் செங்கோல் வைத்தால், தமிழ்நாட்டில் வாக்களிப்பார்கள் என்று யார் சொன்னார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. புதிய நாடாளுமன்றக் கட்டடத்தைத் திறப்பதற்கு, குடியரசுத் தலைவரைக் கூட அழைக்கவில்லை. ஆனால், ஊரில் உள்ள மடாதிபதிகளையெல்லாம் அழைத்து, பூஜை செய்து புதிய நாடாளுமன்றத்தைத் திறக்கிறார்கள்.

இதுதான் ஆரிய மாடலுக்கும், திராவிட மாடலுக்கும் உள்ள வித்தியாசமாகும். நம்முடைய தலைவர், இங்கே சென்னையில் கலைஞர் நூற்றாண்டு மருத்துவமனையைத் திறப்பதற்கு, டில்லிக்குச் சென்று, குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு அவர்களை அழைத்தார். ஆனால், ஒன்றிய அரசு கட்டிய புதிய நாடாளுமன்றக் கட்டடத் திறப்பு விழாவிற்குக் குடியரசுத் தலைவருக்கு அழைப்பு இல்லை. இது தான், தி.மு.க.விற்கும், பா.ஜ.க.விற்கும் உள்ள வித்தியாசம்!

### கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வை ஓட, ஓட விரட்டினீர்கள்!

2017 ஆம் ஆண்டு ஜல்லிக்கட்டுப் போராட்டத்திற்குப் பிறகு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், 40க்கு 40 தொகுதிகளிலும் பா.ஜ.க.வை நீங்கள் ஓட ஓட விரட்டினீர்கள்.

இன்றைக்கு ஜல்லிக்கட்டு நன்றி அறிவிப்புக் கூட்டம் நடைபெறுகிறது. அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில், இந்த பாசிச பா.ஜ.க. கும்பலையும் நீங்கள் விரட்டியடிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த 2021 ஆம் ஆண்டு தேர்தலில், நாம் அத்தனை பேரும் சேர்ந்து அடிமைகளை விரட்டியடித்தோம். வரவிருக்கின்ற 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில், அடிமைகளுடைய எஜமானர்களை விரட்டி விரட்டி அடிப்போம் என்று கூறிக் கொண்டு, இந்தப் பாராட்டு விழாவினை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்த விழாக் குழுவினருக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### கலந்துகொண்டோர்!

சட்டப்போராட்டத்தின் மூலம், தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டை மீட்டெடுத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தமிழ்நாடு அனைத்து ஜல்லிக்கட்டு அமைப்புகளின் சார்பில் புதுக்கோட்டையில், நேற்று (18.6.2023) மாலை நடைபெற்ற இந்த மாபெரும் பாராட்டு விழாவில் – அமைச்சர்கள் கே.என்.நேரு, எஸ்.ரகுபதி, கே.ஆர். பெரிய கருப்பன், அனிதா ராதாகிருஷ்ணன், பி.மூர்த்தி, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, எஸ்.எஸ். சிவசங்கர், சிவ.வீ. மெய்யநாதன்,

புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், இலக்கிய அணி மாநில துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப் பித்தன், மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம். அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர்கள் துரை சந்திரசேகரன், திருமதி தமிழரசி, புதுக்கோட்டை டாக்டர் முத்துராஜா, பழனியாண்டி, ஜல்லிக்கட்டு பேரவையின் தலைவர் ராஜசேகர், அதன் இளைஞர் அணிச் செயலாளர் ராஜேஷ் உள்பட முன்னணியினர் பலரும் கலந்து கொண்டார்கள்.